# <u>பத்திரிக்கை செய்தி</u>

## <u>புதிதாக கட்டும் வீட்டிற்கு கட்டிட வரைபட அனுமதி வழங்க ரூ.15,000/- லஞ்சம் வாங்கிய பஞ்சாயத்து தலைவர் மற்றும் பஞ்சாயத்து குமாஸ்தா கைது</u>

புகார்தாரர் திரு.கிருஷ்ணமூர்த்தி, அய்யங்கார்குளம் கிராமம், காஞ்சிபுரம் மாவட்டத்தில் வசித்து வருகிறார். புகார்தாரர் தான் புதிதாக கட்டப்போகும் வீட்டிற்கு கட்டிட வரைபட அனுமதி கேட்டு அய்யங்கார்குளம் கிராம நிர்வாக அலுவலகத்தில் விண்ணப்பத்திருந்தார். விண்ணபத்தின் மீது நடவடிக்கை இல்லாத காரணத்தினால் கடந்த 22.02.2023 அன்று விண்ணப்பத்தின் தன்மையை அறிய அய்யங்கார்குளம் கிராம நிர்வாக அலுவலகத்திற்கு சென்றுள்ளார், அப்போது அங்கிருந்த கிராம பஞ்சாயத்து தலைவர் திருமதி. வேண்டா, அவர்கள் விண்ணபத்தினை பரிசீலனை செய்து, விண்ணப்பத்திற்கு கட்டணமாக ரூ.4,480/- மற்றும் ரூ.7,480/- வரைவு ஓலை மூலமாக கொடுக்க வேண்டும் எனவும், மேலும் கட்டிட வரைபட அனுமதி வழங்க தனக்கு ரூ.15,000/- லஞ்சமாக கொடுக்க வேண்டுமென கேட்டுள்ளார். புகார்தாரர், தன்னிடம் தற்போது அவ்வளவு பணம் இல்லை என்றும் பணத்தை பின்னர் வந்து தருவதாகவும் கூறியுள்ளார். கடந்த 09.03.2023 அன்று புகார்தாரர் தொலைபேசி மூலமாக கிராம பஞ்சாயத்து தலைவரை தொடர்பு கொண்டுள்ளார். திருமதி.வேண்டா, கிராம பஞ்சாயத்து தலைவர் 13.03.2023 அன்று காலை அலுவலகம் வந்து தன்னை சந்திக்குமாறு கூறியுள்ளார். லஞ்சம் கொடுக்க விரும்பாத புகார்தாரர், காஞ்சிபுரம் லஞ்ச ஒழிப்பு பிரிவில் அளித்த புகாரின் பேரில் நேற்று 13.03.2023, பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. ஆனால் மேற்படி திருமதி. வேண்டா, கிராம பஞ்சாயத்து தலைவர், காஞ்சிபுரம் மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் அலுவலக கூட்டத்திற்கு சென்றபடியால் பொறிவைப்பு நடவடிக்கை தற்காலிகமாக ஒத்திவைக்கப்பட்டது. இன்று 14.03.2023 பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. பொறிவைப்பு நடவடிக்கையின் போது திருமதி.வேண்டா அவர்களின் உத்தரவின் பேரில் திருமதி.புவனா, பஞ்சாயத்து குமாஸ்தா கட்டிட வரைபட விண்ணப்பத்திற்கு கட்டணமாக ரூ.4,480/- மற்றும் ரூ.7,480/- வரைவு ஓலைகள் மற்றும் லஞ்ச பணமான ரூ.15,000/-யை புகார்தாரரிடமிருந்து பெற்று பஞ்சாயத்து தலைவரின் பீரோவில் வைத்துள்ளார். ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அலுவலர்களால் இருவரும் கைது செய்யப்பட்டனர்.

## PRESS NOTE

## PANCHAYAT PRESIDENT AND PANCHAYAT CLERK ARRESTED FOR DEMAND AND OBTAINMENT OF BRIBE RS.15,000/- TO ISSUE BUILDING PLAN APPROVAL

The complainant Tr.Krishnamoorthy, is residing at Ayyangarkulam Village, Kanchipuram District. The complainant had applied plan approval for newly constructing house at Ayyangarkulam Village Panchayat Office, Kanchipuram District. On 22.02.2023, the complainant went to the Ayyangar Kulam Village Panchayat Office, for knowing the status of his application. Tmt.Venda, Panchayat President, Ayyangarkulam Village, Kanchipuram District, asked to the complainant pay Rs.4,480/- and Rs.7,480/- through draft for approval fee and demanded Rs.15,000/- as bribe for processing his application. On 09.03.2023 the complainant contact Tmt.Venda over phone to know the status of his application. Tmt.Venda, asked the complainant to come on 13.03.2023 to her office and met her. Not willing to give bribe, the complainant approached the Vigilance and Anti-Corruption, Kanchipuram detachment and gave complaint. In this connection a case was registered and a trap was organized. On 13.03.2023, during the trap proceedings, Tmt.Venda was attending a meeting at the Collectorate, Kanchipuram District, did not materialize yesterday. Today 14.03.2023 again the trap was organized and during the trap proceedings, on the instruction of Tmt.Venda, Panchayat President, Tmt.Bhuvana, Panchayat Clerk, received the demand drafts and bribe money of Rs.15,000/- from the complainant and kept it in the office bureau. Both the accused were arrested.